# பூலாம்பாடி பேரூராட்சி

பெரம்பலூர் மாவட்டம்

<u>ந.க.எண் : 81 / 2010</u> <u>நாள் : 19.05.2010</u>

## <u>ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு</u>

பூலாம்பாடி பேரூராட்சியில் 2010–2011ம் ஆண்டிற்கு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் கீழ்காணும் வேலையை செய்ய மூடி முத்திரையிப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பூலாம்பாடி பேரூராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் 10.06.2010 ம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை செயல் அலுவலர் அவர்களிடம் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரிடமோ நேரிலோ அல்லது தபால் மூலமோ கிடைக்கும் வண்ணம் அனுப்ப வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தபுள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். குறைந்த ஒப்பந்தபுள்ளிகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | டேவணித் தொகை 2% | ஒப்பந்தப் புள்ளி படிவம் / விற்பனை வரி | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பூலாம்பாடி புதூர் கடம்பூர் சாலை தார்சாலை, வடிகால் மற்றும் CFL விளக்குகள் அமைத்தல் | **14.00** | 28,000 | 6,240 | 90 நாட்கள் |
| 2 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி அருகில் புலஎண்.292/12 ல் சமுதாய கூடம் கட்டுதல் | **17.50** | 35,000 | 6,240 | 120 நாட்கள் |
| 3 | நல்ல தண்ணீர் குளம் தூர் வாரி, கரை பலப்படுத்தி மற்றும் படித்துறை அமைத்தல் | **5.00** | 10,000 | 1,560 | 90 நாட்கள் |
| 4 | அம்பேத்கார் தெரு, கக்கன் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | **6.30** | 12,600 | 1,560 | 60 நாட்கள் |
| 5 | புல எண்.838/9 மந்தை வெளியில் வணிக வளாகம் கட்டுதல் | **11.00** | 22,000 | 6,240 | 120 நாட்கள் |
| 6 | புல எண். 367/1 கிழக்கு மயானம் எரிமேடை, அணுகு சாலை, விளக்கு வசதி, பொது உபயோக கூடம் மற்றும் சுற்றுச் சுவர் அமைத்தல். | **5.00** | 10,000 | 1,560 | 90 நாட்கள் |
| 7 | வார்டு எண்.14 புல எண். 4 ல் கழிப்பிடம் அமைத்தல் | **5.00** | 10,000 | 1,560 | 90 நாட்கள் |

### <u>நிபந்தனைகள்</u>

1. ஒப்பந்தபுள்ளிகள் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் விதிகள் 2000 (அரசாணை 445/நிதித்துறை/ நாள். 26.09.2000 மற்றும் அரசாணை 446/நிதித்துறை/நாள்.26.09.2000)ன் படி பணியினை செய்து முடிக்க வேண்டும்.

2. பணிகள் நடைபெறுமிடத்தில் பணி பற்றிய விபரங்களை தெரிவிக்கும் விளம்பர பலகை வைக்கப்பட வேண்டும்.

3. பணி துவங்கும் முன்னரும், பணி நடைபெறும் போதும் பணி முடிவடைந்த பின்னரும் வண்ண புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு எடுத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. ஒப்பந்தபுள்ளி படிவ கட்டணம் மற்றும் வைப்புத் தொகையை 09.06.2010 ம் தேதி புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை செலுத்தலாம். வைப்புத் தொகை ரசீது இல்லாமல் பெறப்படும் டெண்டர்கள் நிராகரிக்கப்படும்.

5. ரூ.20/– மதிப்புள்ள பத்திரத்தில் ஒப்பந்தம் எழுதி தரப்பட வேண்டும்.

6. வேலைக்கு பயன்படுத்தப்படும் சிமெண்ட், இரும்புகளின் தரம் ஆகியவைகளுக்கு சான்று பெறப்பட்டு ஒப்படைக்க வேண்டும்.

7. ஒப்பந்ததாரர்கள் 2010–2011 ம் ஆண்டிற்கு ஒப்பந்தாரர் பதிவு புதுப்பித்திருக்க வேண்டும்.

8. அளவுகள் மற்றும் மேலளவுகள் தொழில்நுட்ப அலுவலர்களால் எடுக்கப்பட்ட பின்னரே பட்டியல் தொகை வழங்கப்படும்.

9. மற்ற நிபந்தனைகளை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். மேலும் வரிசை எண்.3, 4, 6, 7 ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளி படிவத்தை http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணைய தள முகவரியிலும், வரிசை எண். 1,2,5 ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளி படிவத்தை http://www.tenders.tn.gov.in என்ற இணைய தள முகவரியிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**(ஒம்) திருமதி. பி. ராமதிலகம்**
**தலைவர்**
பூலாம்பாடிபேரூராட்சி
பெரம்பலூர் மாவட்டம்.

**(ஒம்) வீ. குணசேகரன், பி.ஏ.,**
**செயல் அலுவலர் (பொ)**
பூலாம்பாடிபேரூராட்சி
பெரம்பலூர் மாவட்டம்.